நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஏரிகளில் மீன்கள் விடும் திட்டம் தொடக்கம்**

First Published : 29 Dec 2011 01:20:15 PM IST

திருவண்ணாமலை, டிச. 28: திருவண்ணாமலை மாவட்டத்தில் மீன் உற்பத்தியை பெருக்கும் வகையில் 14 ஏரிகளில் மீன் குஞ்சுகள் விடும் திட்டத்தை ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்தார்.

மீன்வளத்துறை சார்பில் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் துரிஞ்சலாறு உபவடிநிலப்பகுதிகளில் உள்ள பொதுப்பணித்துறை ஏரிகளில் மீன்வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு மீன் குஞ்சுகள் நேரடியாக விடப்படுகின்றன.

கட்லா, ரோக், சில்வர், மிருகால் போன்ற பல்வேறு வகை மீன் குஞ்சுகள் ரூ.1 லட்சம் செலவில் 14 ஏரிகளில் விடப்படுகின்றன. கொளக்குடி ஏரியில் மீன்குஞ்சுகளை விட்டு இத்திட்டத்தை ஆட்சியர் மிஸ்ரா தொடங்கி வைத்தார். வனப்பாதுகாவலர் ராகுல், மீன்வளத்துறை உதவி இயக்குநர் ப.கோபால், மக்கள் தொடர்பு அலுவலர் சக்திதாசன், மீன்வளத் துறை ஆய்வர்கள் சிவக்குமார், ரகு, ரவி, ஆகியோர் உடனிருந்தனர்.

**மீன் வளர்ப்புத் தொழிலுக்கு 50 சதம் மானியம்**

First Published : 29 Dec 2011 11:58:42 AM IST

புதுக்கோட்டை, டிச. 28: மீன் வளர்ப்பு தொழில் முனைவோருக்கு 50 சத அளவுக்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் ப. மகேஸ்வரி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2011-12 ஆம் ஆண்டுக்கு மீன்வளத் துறையின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைப்பதற்கு ரூ. 5 லட்சம் (50 சத மானியம்) வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் ரூ. 10 லட்சம் மதிப்பில் ஆண்டுக்கு சுமார் ஒரு கோடி மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யக் கூடிய மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க உள்ள இடம், அதற்குத் தகுதியானதாகவும், வெப்0ளம் பாதிப்பு ஏற்படாத இடத்திலும் இருக்க வேண்டும்.

தரமான நிலத்தடி நீர் அல்லது ஆற்றுப் பாசனப் பகுதியில் மின் வசதி, சாலை வசதி கொண்டதாகவும் இருக்க வேண்டும். மீன்குஞ்சு உற்பத்தி மையம் புதிதாக அமைக்கப்பட வேண்டும். 2 ஹெக்டேர் சொந்த நிலம் அல்லது பத்து ஆண்டு குத்தகை பெற்றிருக்க வேண்டும்.

தேவைக்கும் அதிக அளவில் விவசாயிகள் விண்ணப்பித்தால் தேவைக்கும், தகுதிக்கும் ஏற்ப பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

விருப்பமுள்ளவர்கள் மீன்வள உதவி இயக்குநர், உள்நாட்டு மீன்வளம், எண்: 4, காயிதே மில்லத் தெரு, காஜா நகர், மன்னார்புரம், திருச்சி- 20 என்ற அலுவலக முகவரியில் நேரில் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவம் பெற்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என்றார் அவர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**மும்பைக்கு பறக்கும் சேலம் செங்கரும்பு**

டிசம்பர் 29,2011,02:33



நாமக்கல்:'பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, விற்பனைக்கு வந்துள்ள கரும்பின் விலை, கடந்த ஆண்டை விட, இரு மடங்கு உயர்ந்துள்ளது. உற்பத்தி செய்யப்படும் கரும்பில் பெரும்பகுதி, மும்பைக்கு அனுப்பப்படுவதே, விலையேற்றத்துக்கு முக்கிய காரணம்' என, கரும்பு வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் ஆண்டுதோறும் ஜனவரியில் செங்கரும்பு நடவு நடைபெற்று நவம்பர், டிசம்பர் மாதங்களில் அறுவடை செய்யப்படும். இதன்படி, தற்போது செங்கரும்பு, உள்ளூர் சந்தைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

செங்கரும்பு ஒன்று, 25 ரூபாய் வீதம், ஒரு ஜோடி கரும்பு, 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு, ஒரு ஜோடி கரும்பு, 25 ரூபாய்க்கு விற்ற நிலையில், தற்போது, விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து சேலம் மாவட்டம் வைகுந்தத்தை சேர்ந்த கரும்பு வியாபாரிகள் ராஜமாணிக்கம், பழனி வேல் முருகன் ஆகியோர் கூறியதாவது:இவ்வாண்டு, செங்கரும்பு சாகுபடியை விவசாயிகள் வெகுவாக குறைத்துள்ளனர். அதனால், செங்கரும்பின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. 20 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு, 300 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்படுகிறது.

இது, கடந்த ஆண்டை விட, இரு மடங்கு அதிகமாகும். எனவே, அவற்றை வாங்கி விற்பனை செய்யும் வியாபாரிகள், வண்டி வாடகை ஆட்கள் கூலி உள்ளிட்டவை சேர்த்து ஒரு ஜோடி கரும்பை, 50 ரூபாய் வீதம் விற்பனை செய்கின்றனர்.

ங்கல் பண்டிகை நெருங்கும் போது, கரும்பின் விலை மேலும் அதிகரிக்கும். நாமக்கல் மாவட்டத்தில் செங்கரும்பு சாகுபடி இல்லாததால், சேலத்தில் இருந்து செங்கரும்பு வாங்கி வந்து விற்பனை செய்யப்படுகிறது.தவிர, சேலம் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கரும்புகள், நேரடியாக மும்பைக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.
அங்கு கொண்டு செல்லப்படும் கரும்பின் மேல் தோல் உறிக்கப்பட்டு, சிறு சிறு துண்டுகளாக நறுக்கி பாக்கெட்டில் அடைத்து வைத்து விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கிலோ கரும்பு, 150 ரூபாய் வரை விற்பனையாகிறது.எனவே, அங்கிருந்து வரும் வியாபாரிகள்,விவசாயிகள் கேட்ட தொகையை கொடுக்கின்றனர். அதனால் அவர்களுக்கே விவசாயிகள் கரும்பை வழங்குகின்றனர். இதனால், உள்ளூர் வியாபாரிகளுக்கு கரும்பு கிடைப்பதில்லை. கரும்பு வரத்து குறைந்ததே இதற்குக் காரணம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**குறுந்தானியங்களை பயிரிட விவசாயிகள் தயக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2011,00:59 IST

மதுரை : குதிரைவாலி, தினை போன்ற குறுந்தானியங்கள் குறித்து போதிய விழிப்புணர்வு ஏற்பட்ட நிலையிலும், விவசாயிகள் ஒருசில காரணங்களால் இவற்றை பயிரிட தயக்கம்

காட்டுகின்றனர். குறுந்தானிய மேம்பாட்டுக்காக மத்திய அரசு ரூ.300 கோடி ஒதுக்கியுள்ளது. பெங்களூருவில் இதற்கென தனி ஆராய்ச்சி நிலையம் செயல்படுகிறது. தமிழகத்தில், தென்மாவட்டங்களில் கேழ்வரகு, சாமை, வரகு, தினை, பனிவரகு, குதிரைவாலி விளைவிக்கப்படுகின்றன. ஆனால் 15 ஆண்டுகளாக குறுந்தானியங்களை பயிரிடும் பரப்பளவு குறைந்து வருகிறது.

குதிரைவாலியில் இரும்புச்சத்து, பாஸ்பரஸ், தாதுஉப்புகள், நார்ச்சத்துகள் அனைத்தும் உள்ளன. பூச்சிதாக்குதலுக்கு உட்படாது. இயற்கை உரங்கள் போதுமானது. உறுதியான தண்டு இருப்பதால், அதிக மழையையும் தாங்கி நிற்கும். உப்புத்தன்மையுடைய நிலத்திலும் வளரும். குறைந்தளவு தண்ணீர் போதும். மற்ற குறுந்தானியங்களிலும் நோய் தாக்குதல் இருக்காது. விதைப்பதுடன் வேலை முடிந்தது என விவசாயிகள் நினைப்பதால், குறைந்தளவு உற்பத்தி கிடைக்கிறது. தண்ணீர், உரமிடுதலில் போதிய அக்கறை காட்டினாலும் விளைச்சல் இருமடங்காகும்.

தற்போது மக்களிடம் குறுந்தானியங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்பட்ட நிலையிலும், விவசாயிகள் சாகுபடி செய்ய தயங்குகின்றனர். அறுவடைக்கு பின், இவற்றை சுத்தம் செய்வது சவாலாக உள்ளது. அரிசி ஆலைகளைப் போல, குறுந்தானியங்களை சுத்தம் செய்ய ஆலைகள் இல்லை. கைகளால் சுத்தம் செய்ய ஆட்கள் இல்லை. விவசாயக் கல்லூரி டீன் வைரவன், இணைப் பேராசிரியர் வன்னியராஜன் கூறியதாவது:

குறுந்தானியங்களில் ஒரே வகையான ரகங்களை விவசாயிகள் பயிரிடுவதில்லை. தரமான விதையை பயிரிட்டு, கொஞ்சம் தண்ணீர் காட்டினாலும் விளைச்சல் அதிகரிக்கும். தற்போதுள்ள தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, ஒரு எக்டேருக்கு 850 கிலோ வரை உற்பத்தி செய்யமுடியும். குறைந்த காலப் பயிர்களாக இருப்பதால், நெல் தரிசாக (அறுவடைக்கு பின்) இருக்கும் போது, பயிரிடலாம். விவசாயிகள் குழுவாக இணைந்து, அரவை மில் அமைக்கலாம், என்றனர்.

**பார்த்தீனியம் களையை கட்டுப்படுத்தும் முறைகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2011,01:37 IST

கருத்தை பதிவு செய்ய

தென்காசி:"பார்த்தீனியம் களையை கட்டுப்படுத்தும் முறைகள்' பற்றி தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விளக்கியுள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:""மூக்குத்திப்பூ என்று அழைக்கப்படும் பார்த்தீனிய களை செடி 1950ம் ஆண்டு முதல் இந்தியாவில் வேகமாக பரவி தற்போது எங்கெங்கும் காணப்படுகிறது. இச்செடி விஷ தன்மையுடையது. அனைத்துவித சூழ்நிலைகளிலும் வளரக்கூடியது. அதிக அளவு

விதைகளை உற்பத்தி செய்து பெருமளவில் இனவிருத்தியடையும் தன்மை வாய்ந்தது. நீண்ட காலம் உயிருடன் இருக்க கூடிய இதன் விதைகளானது காற்றின் மூலம் எளிதில் பரவக்கூடியது. இக்களையானது ஒரு செடிக்கு 5000 முதல் 10000ம் விதைகளை உற்பத்தி செய்ய கூடியது.

இதன் முதிர்ச்சியடையாத விதைகள் கூட முளைக்கும் திறன் பெற்றது.இக்களையால் ஒவ்வாமை, தோல் நோய், ஆஸ்துமா, சுவாசம் தொடர்பான நோய்கள் மனிதனுக்கு ஏற்படுகிறது. கால்நடைகளுக்கு பசியின்மை, எடை குறைவு, குடல்புண் போன்ற நோய்கள் ஏற்படும். இதனால் பெரும் பாதிப்பு விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. இதனை ஒருங்கிணைந்த களை நிர்வாக முறைகளை பின்பற்றி கட்டுப்படுத்தலாம்.களை மேலாண்மைபார்த்தீனிய களைகளை பூப்பதற்கு முன் வேரோடு பிடுங்கி எரித்து விட வேண்டும். அடர் ஆவாரை மற்றும் ஆவாரை செடிகளில் இக்களையை கட்டுப்படுத்தக்கூடிய வேதியல் பொருட்கள் இருப்பதால் இச்செடிகளை வளர்ப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். செவ்வந்தி பயிரை சுழற்சி முறையில் பயிரிட்டு கட்டுப்படுத்தலாம். சைக்கோகிரம்மா பைகலரேட்டா என்ற வகை வண்டுகளை ஒரு ஏக்கருக்கு 2 லட்சம் அளவில் விட்டு கட்டுப்படுத்தலாம்.

மண்புழு உரமாக்குதல்

பார்த்தீனிய களை செடிகளை பூக்கும் முன் பிடுங்கி 10 கிலோ களைக்கு ஒரு கிலோ என்ற அளவில் பசுஞ்சாணம் கலந்து நிழலில் 10 நாட்கள் மக்க வைக்க வேண்டும். பின் மண்புழுக்கள் விட்டு 45 நாட்களில் இதனை உரமாக்கலாம்.

தரிசு நிலங்களில்பார்த்தீனியம் விதைகள் முளைப்பதற்கு முன் அட்ரசின் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 4 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

களை முளைத்த பின் சமையல் உப்பு 200 கிராம், பீப்பால் 2 மி.லி.,மருந்து ஒரு லிட்டர் நீருடன் கலந்து தெளிக்க வேண்டும். களைகள் பூப்பதற்கு முன் 2, 4டி சோடியம் உப்பு 10 கிராம் அல்லது கிளைப்போசேட் மருந்து 15 மி.லி, மற்றும் அம்மோனியம் சல்பேட் 20 கிராம் மற்றும் சோப்பு கரைசல் 2 மி.லி.,மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். மெட்ரிபுசின் களை கொல்லி 4 கிராம் மற்றும் சோப்பு கரைசல் 2 மி.லி., ஒரு லிட்டர் நீருடன் கலந்து தெளித்து இக்களையை கட்டுப்படுத்தலாம்.

பயிர் நிலங்களில்பயிர் சாகுபடி செய்யப்படும் நிலங்களில் கைகளால் பறித்தோ அல்லது களை கொல்லி தெளித்தோ கட்டுப்படுத்தலாம். நிலக்கடலை பயிரில் விதைத்த 3ம் நாள் ஆக்சிபுளோர்பென் மருந்து ஏக்கருக்கு 300 மி.லி., என்ற அளவில் தெளிக்க வேண்டும். பயறு வகை பயிர்கள் மற்றும் சூரியகாந்தி பயிரில் விதைத்த 4ம் நாள் பெண்டிமெத்தலின் மருந்தை

ஏக்கருக்கு 1.300 கிலோ என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
கரும்பில் இக்களையை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு 4 கிராம் என்ற அளவில் அட்ரசின் மருந்து கலந்து நட்ட 3ம் நாள் தெளிக்க வேண்டும். கரும்பு நட்ட 25-30ம் நாளில் பாராகுவாட் ஒரு கிலோ மற்றும் 2, 4டி 600 கிராம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்" என தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**உரக்கடைகளுக்கு புதிய கட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2011,01:37 IST

கருத்தை பதிவு செய்ய
தென்காசி:உரக்கடைகளுக்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:""விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் உரம் கிடைப்பதை உறுதி செய்திட செல்போன் அடிப்படையிலான உரக்கண்காணிப்பு திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. செல்போன் உதவி கொண்டு உர இருப்பை கண்காணித்திட இத்திட்டம் உதவும். மேலும் உரங்கள் இடம் விட்டு இடம் கொண்டு செல்லப்படுவதை கண்காணிக்கவும், விவசாயிகளுக்கு கிடைக்கும் நிலையில் உள்ள உர அளவை அறியவும் இத்திட்டம் பயன்படும்.உர பதுக்கல், கள்ள சந்தையில் விற்றல் போன்றவற்றை தடுத்து, உரிய விலையில் விவசாயிகளுக்கு உரம் கிடைத்திட இத்திட்டம் துணை புரியும். இத்திட்டத்தின்படி அனைத்து கூட்டுறவு மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் தங்கள் பெயரை நெல்லை மாவட்டத்திற்கு ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள உர உற்பத்தியாளர் கோரமண்டல் நிறுவன பிரதியிடம் நாளை (31ம் தேதி)க்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இத்திட்டத்தில் சேர தவறும் உர விற்பனையாளர்களுக்கு உரம் வினியோகம் செய்யப்படாது. உர உரிமம் புதுப்பிக்கப்படமாட்டாது.தென்காசி வட்டார உர விற்பனையாளர்கள் இத்திட்டத்தில் பதிவு செய்ய தென்காசி வேளாண்மை அலுவலரை 04633-280030 என்ற போன் எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் கேட்டறியலாம்" என தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

பாசனத்திற்கு தண்ணீர் கிடைத்தாலும் மகசூலுக்கு விலை கிடைக்குமா?

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2011,00:42 IST

செய்துங்கநல்லூர்:பாசனத்திற்கு தண்ணீர் கிடைத்தாலும் மகசூலுக்கு விலை கிடைக்குமா என ராமானுஜம்புதூர் பகுதி விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.
கருங்குளம் யூனியன் ராமானுஜம்புதூர் பகுதியில் குளங்கள் அதிகம் உள்ளது. சின்னார்குளம், தீராத்திகுளம், இலுப்பைக்குளம், சேரகுளம், சாத்தநேரிகுளம், செம்பரபேரிகுளம் உட்பட்ட பல்வேறு குளங்கள் உள்ளன. நமக்கு தேவையான மழை பெய்துள்ளது என்று அரசு அறிவித்திருந்தாலும் இப்பகுதியில் விவசாயத்திற்கு தேவையான மழை பெய்யவில்லை. இப்பகுதி குளங்கள் நிரம்பவில்லை. பாதி அல்லது முக்கால் அளவு நிறைந்துள்ள இக்குளத்தின் தண்ணீரை வைத்து விவசாயம் செய்ய முடியுமா என்ற எண்ணத்தில் இப்பகுதி விவசாயிகள் விவசாய வேலைகளை துவங்கினர்.

கிடைத்துள்ள தண்ணீரை வைத்து நாற்று தயாரித்து நடவு செய்துள்ள நிலையில் தொடர்ந்து பாசன தண்ணீரை எதிர்பார்த்து இருந்தனர். இப்போது மணிமுத்தாறு அணையிலிருந்து இப்பகுதிக்கு ரீச் 4லிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மகிழ்ச்சி அடைந்துள்ள இந்த விவசாயிகள் இப்போது எப்படியாவது விளைந்து விடும். ஆனால் விளை பொருட்களுக்கு தகுந்த விலை கிடைக்குமா என்று கவலை அடைந்துள்ளனர். இப்பகுதியை சேர்ந்த விவசாயி ரத்தினசாமி கூறியதாவது, எனது வயல் சின்னார்குளம் பாசனத்தில் உள்ளது. 36 கோட்டை விதைப்பாடு பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்கும் இக்குளம் பாதி தான் நிரம்பியுள்ளது. இந்த ஆண்டு மணிமுத்தாறு அணை பாசனம் ரீச் 3 மற்றும் 4க்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்ற முறையுள்ளது. அதன்படி திறந்து விட்டார்கள். எப்படியும் வயல் விளைந்து விடும். ஆனால் அறுவடை செய்த நெல்லை தகுந்த விலைக்கு விற்க முடியுமா என்று கேள்விக்குறியாக உள்ளது. காரணம் இடு பொருள்களின் விலை அதிகமாக உள்ளது. தற்சமயம் அம்பை 16 என்ற ரக நெல் பயிரிட்டுள்ளேன். அதற்கான உரம் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியதாயிற்று. கடந்த ஆண்டு டிஏஇபி உரம் 600 ரூபாயாக இருந்தது.

இந்த ஆண்டு அதன் விலை ஆயிரம் ரூபாயாக உள்ளது. காம்ப்ளக்ஸ் உரம் கடந்த ஆண்டு 800 ஆக உள்ளது. இதே போல் யூரியாவும் விலை உயர்ந்துள்ளது. ஆனா ல் நெல் விலை இந்த ஆண்டு குறைந்துள்ளது. கடந்த ஆண்டு நெல் விலை குவிண்டாலுக்கு ரூ.ஆயிரத்து 400 ஆக இருந்தது. இந்த ஆண்டு ரூ.ஆயிரத்து 200 ஆக உள்ளது. எனவே நெல்லை விளைய வைக்க அதிகமான

பணம் செலவழித்துள்ளேன். ஆனால் நெல் அந்த அளவுக்கு விற்க முடியுமா என்பது தான் எனது கவலையாக உள்ளது இவ்வாறு அவர் கூறினார்.இதே போல் இப்பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். எனவே அரசு நெல்லுக்கான கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். உரக் கொள்கையை கைவிட்டுள்ள அரசு நெல் கொள்முதல் கொள்கையை கையில் வைத்திருப்பது நியாயமா? என்று விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

**மானியம் குறித்து விவசாயி புகார்: மாவட்ட கலெக்டர் திடீர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2011,02:23 IST

கருத்தை பதிவு செய்ய

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதி விவசாயிகளிடம், மஞ்சள் மானியம் குறித்து, மாவட்ட கலெக்டர் விசாரணை நடத்தியதால், பரபரப்பு ஏற்பட்டது.

பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், தோட்டக்கலைத்துறை மூலம் மஞ்சள் பயிரிட்ட விவசாயிகளுக்கு, மானியம் வழங்குவதில், அதிகாரிகள் பாரபட்சம் காட்டுவதாக, விவசாயிகள் புகார் தெரிவித்தனர். மேலும், ஒருசில விவசாயிகளுக்கு மட்டும், தொடர்ந்து மானியம் வழங்குவதாக புகார் எழுந்தது.இந்நிலையில், மாவட்ட கலெக்டர் மகரபூஷணம், பனமரத்துப்பட்டி அருகே பெரமனூர் வடக்காடு விவசாயி கோவிந்தராஜ் தோட்டத்துக்கு, நேற்று மாலை திடீரென வந்தார்.

விவசாயிடம், மஞ்சள் பயிரிட்டுள்ள பரப்பளவு, தோட்டக்கலைத்துறை சார்பில் பெற்ற மானியம், மானியம் வழங்க அதிகாரிகள் பணம் கேட்டனரா என்பது குறித்து விசாரித்தார்.மானியம் வழங்கப்பட்ட பரப்பளவு, விவசாயிகளின் எண்ணிக்கை, மானிய தொகை உள்ளிட்ட விபரங்கள் குறித்து, தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம், கலெக்டர் கேட்டறிந்தார். மாவட்ட கலெக்டரின் திடீர் விஸிட்டால், அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.விசாரணையின்போது, பனமரத்துப்பட்டி வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பரணி, தோட்டக்கலை அலுவலர் கணேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

**இயற்கை உரங்களை மட்டும் பயன்படுத்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2011,22:18 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : "செயற்கை உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களை மட்டும் பயன்படுத்த வேண்டும்' என பொள்ளாச்சியில் நடந்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. பொள்ளாச்சியில், பொதுப்பணித்துறை, நீரியல் கோட்டம் சார்பில் நிலநீர் மேலாண்மை குறித்த கருத்தரங்கு நடந்தது. நீரியல் கோட்ட செயற்பொறியாளர் கண்ணப்பன் தலைமை வகித்தார். பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ரங்கநாதன் முன்னிலை வகித்தார். கருத்தரங்கில், சுற்றுச்சூழல் நிறுவன இயக்குனர் ரேவதி பேசியதாவது:இந்தியாவில், 50 ஆண்டுகளுக்கு முன் இருந்த விவசாயத்தின் நிலை தற்போது மாறியுள்ளது. ரசாயன மற்றும் வீரியம் அதிகமுள்ள உரங்களையும், பூச்சிக்கொல்லி மருந்தையும் பயன்படுத்தி வருகின்றனர். தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் நாளடைவில் மண்ணின் இயற்கை தன்மை கெட்டுவிடுகிறது. பல உலக நாடுகளில் தடை செய்யப்பட்ட 160 ரசாயன மருந்துகள் நம் இந்தியாவில் மட்டும் பயன்படுத்தி வருகின்றனர். இவற்றை தடை செய்ய அரசு நினைத்தாலும், விவசாயிகள் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே தடை செய்ய முடியும். செயற்கை உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களை மட்டும் பயன்படுத்த வேண்டும். தென்னை உட்பட அனைத்து மரங்களிலும் உற்பத்தியை பெருக்க "ஜீவாமிர்தத்தை'யும், செடிகளிலிருந்து வீணாகும் கழிவுகளிலிருந்து பெறலாம். மாட்டு சாணம், கோமியம், பயறு மாவு, மண், நாட்டு சர்க்கரை அல்லது இளநீர் கொண்டு ஜீவாமிர்தத்தை தயாரிக்கலாம்.இவ்வாறு, ரேவதி பேசினார்.பரம்பிக்குளம் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சிவகுமார், பொதுப்பணித்துறை, நீரியல் கோட்ட அதிகாரிகள், விவசாயிகள் பங்கேற்றனர். ஜமீன்ஊத்துக்குளி பாசன சங்க தலைவர் கிருஷ்ணசாமி நன்றி கூறினார்.

**பசுமை வீடு திட்ட கிராமசபைக் கூட்டம் பங்கேற்க மக்களிடம் ஆர்வமில்லை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2011,22:18 IST

கருத்தை பதிவு செய்ய

அன்னூர் : பசுமை வீடு பயனாளிகள் பட்டியலுக்கு, அங்கீகாரம் தரும் கிராமசபைக் கூட்டத்தில், மக்கள் அதிகமாக பங்கேற்கவில்லை. தமிழக அரசு, பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தில், வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு, ஒரு லட்சத்து 80

ஆயிரம் செலவில், பசுமை வீடு கட்டித்தரப்படும். இந்த ஆண்டு, சூரிய சக்தியுடன் கூடிய 60 ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என, தெரிவித்துள்ளது. கோவை மாவட்டத்தில், 1,507 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். பயனாளிகள் பட்டியலை, கிராம சபைக் கூட்டத்தில், அங்கீகாரம் பெறும்படி அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, கோவை மாவட்டத்தில், 12 ஒன்றியங்களில் உள்ள 228 ஊராட்சிகளில், கிராமசபைக் கூட்டம் நடந்தது. அன்னூர் ஒன்றியத்தில், பெரும்பாலான ஊராட்சிகளில், கிராமசபைக் கூட்டம் நடத்த, தேவையான மக்கள் வரவில்லை. ஊராட்சியில் உள்ள, மக்கள் தொகையின் அடிப்படையில், கிராமசபைக் கூட்டம் நடத்த, குறைந்தது 50 பேரும், அதிகபட்சம் 500 பேரும் இருந்தால்தான், கூட்டம் நடத்த வேண்டும். எனினும், கோரம் இல்லாமல், வந்தவர்களை வைத்து பயனாளிகள் பட்டியலுக்கு அங்கீகாரம் பெறப்பட்டது. சில ஊராட்சிகளில் தலைவர், துணைத் தலைவர், வார்டு உறுப்பினர்களுடன் 10 பேர் மட்டுமே இருந்தனர். "கிராமசபைக் கூட்டம் நடப்பது குறித்து, பொதுமக்களிடம் போதுமான விளம்பரம் செய்யப்படவில்லை' என, மக்கள் புகார் தெரிவித்தனர். காரேகவுண்டன்பாளையம் ஊராட்சித் தலைவர் சாந்தி கூறுகையில், ""இந்த கூட்டத்தில் பசுமை வீடுகள் திட்ட பயனாளிகளுக்கு, அங்கீகாரம் அளிப்பதைதவிர ,வேறு தீர்மானம் நிறைவேற்ற முடியாது. எனவே தான், மக்கள் அதிகமாக வரவில்லை,'' என்றார். கோவை மாவட்ட ஊராட்சிகளின் உதவி இயக்குனர் ஜெயராமன் கூறியது: கிராமசபைக் கூட்டம் நடப்பது குறித்து, ஒரு வாரம் முன்பே, தினசரி பத்திரிகைகள் மற்றும் ரேடியாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட ஊராட்சிகளில், கிராமம் கிராமமாக "தண்டோரா' போடப்பட்டு, கூட்டம் குறித்து விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டம் நடத்த, தேவையான "கோரம்' இருந்தால்தான், நடத்த வேண்டும், என்றார்.

**வேளாண்துறைக்கு புத்துணர்வு அளிக்க இளைஞர்களுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2011,22:18 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : "துடிப்பான இளைஞர்கள் வருகையின் மூலம், நலிந்து வரும் வேளாண் துறைக்கு புத்துணர்வு அளிக்க முடியும்' என, வேளாண் துறை அமைச்சர் தாமோதரன் பேசினார். தமிழ்நாடு வேளாண் பல்கலையில், "இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு இளைஞர்களே வாருங்கள்' எனும், தலைப்பில் கருத்தரங்கு நேற்று நடந்தது. கருத்தரங்கு மலரை வெளியிட்டு, வேளாண்துறை அமைச்சர் தாமோதரன் பேசியதாவது: உழவுத்தொழில் நின்று விட்டால், அதனோடு மற்ற தொழிலும் முடங்கும் நிலை இருந்தது. சிறப்பு மிக்க வேளாண் துறை, தற்போது ஆட்கள் பற்றாக்குறையால் நலிவடைந்து வருகிறது. விளைநிலங்கள் எல்லாம், விலை நிலங்களாக மாறி வருகிறது. நாளுக்குநாள் மண்ணின் வளம் மலடாகி வருகிறது. சுதந்திரம் அடைந்தபோது மக்கள்

தொகை, 39 கோடியாக இருந்தது; தற்போது 120 கோடியை, எட்டியுள்ளது. இதற்கேற்ப உணவு உற்பத்தியை, அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். வேளாண் பல்கலைகளில் ஆராய்ச்சிகளை பின்பற்றி, உணவு உற்பத்தியில் தன்னிறைவை பெற, விவசாயத்தை தயக்கமின்றி இளைஞர்கள் கையில் எடுக்க வேண்டும். பல்வேறு பிரச்னைக்கு மத்தியில், கிராமத்தில் இருந்து நகரத்தை நோக்கி இடம்பெயர்வு அதிகரித்து வருகிறது. இதனால், உணவின் வாழ்வாதாரமாக நம்பியுள்ள, விவசாயப்பணி முடங்கி வருகிறது. கிராமத்தை வெறுத்து, நகரத்தை நோக்கிச் செல்வதை தவிர்த்தல் நல்லது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பெருக்க, எண்ணற்ற திட்டங்களை வகுத்து, அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இதில், தமிழகமெங்கும் 50 குளிர்பதன கிடங்கு அமைக்க, 82 கோடி ரூபாய் ஒதுக்கீடு; நுண் பாசன திட்டத்தில், சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம்; தீவிர கரும்பு சாகுபடி திட்டத்தில் மானியம் வழங்க 12 கோடி 93 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு; சுயவேலைவாய்ப்பு திட்டம் கீழ் கிராமப்புற இளைஞர்கள் 600 பேருக்கு பயிற்சி என பல்வேறு திட்டங்களை, அளித்து வருகிறது, என்றார்.டில்லி பாரத் கிருஷக் சமாஜின் தலைவர் அஜய் விர் ஜாக்கர் பேசியதாவது: விவசாயத்தில் நன்கு ஆர்வமுள்ளவர்கள், ஏக்கருக்கு 50 ஆயிரம் முதல், ஒரு லட்சம் வரை லாபம் பெற முடியும். வேளாண் துறைகளிடையே சரியான ஒருங்கிணைப்பு இல்லாததால், வளர்ச்சி அடைவதில் சிக்கல் உள்ளது. இதனால், அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.விவசாயிகளால் வோளண் இயந்திரங்களை வாங்க முடியாது. இயந்திரங்களை வாங்கி, விவசாயிகளுக்கு வாடகை முறையில் அளித்திட கூட்டுறவு துறை முன்வர வேண்டும், என்றார். பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசியதாவது: உணவு உற்பத்தியில் 115 மில்லியன் டன் இலக்கை அடைய, தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த இலக்கை அடைய தமிழ்நாடு வேளாண் பல்கலை, 19 பயிர்களுக்கு முக்கிய தொழில் நுட்பங்களை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதில், ஒவ்வொரு பயிருக்கும் ஒன்று அல்லது இரண்டு தொழில் நுட்பங்கள் உள்ளன. தமிழகத்தில், நெல் சாகுபடியில் லேசர் கருவியை பயன்படுத்தி, 2.2 லட்சம் ஹெக்டருக்கு 22 லட்சம் டன் மகசூலை பெற முடியும். பயிறு வகைகளின் உற்பத்தியை அதிகரித்திட, பயிர் ஊக்கிகளை பயன்படுத்திட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தற்போது ஹெக்டேருக்கு கிடைக்கும் 350 கிலோவில் இருந்து, 650 கிலோ கூடுதலாக பெற முடியும். ஆண்டிற்கு, பயிறு வகை உற்பத்தியில் ஏழு லட்சம் டன் தேவைப்படுகிறது. ஆனால், 3 லட்சம் டன் மட்டுமே உற்பத்தி உள்ளது. வேளாண் பல்கலையில் இளநிலை பண்ணை தொழில் நுட்பம் படிப்பு, கடந்த ஆண்டு முதல் அளிக்கப்பட்டு வருகிறது, என்றார். கருத்தரங்கில், முன்னாள் இந்திய குடியரசு தலைவரின் ஆலோசகர் பொன்ராஜ், சென்னை எம்.எஸ்.எஸ்.ஆர்.,நிறுவனத்தின் விஞ்ஞானி பரசுராமன், வேளாண் பல்கலை பதிவாளர் சுப்பையன், மாவட்ட கலெக்டர் கருணாகரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

**உணவு பணவீக்கம் 0.42% ஆக சரிந்தது**

பதிவு செய்த நாள் : 12/30/2011 12:13:54 AM



புதுடெல்லி : டிசம்பர் 17ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் நாட்டின் உணவு பணவீக்கம் கடந்த 6 ஆண்டுகளில் இல்லாத வகையில் 0.42 சதவீதமாக குறைந்தது. அத்தியாவசிய பொருட்கள் குறிப்பாக காய்கறிகள் (36%), வெங்காயம் (59%), உருளை (34%), கோதுமை (3.30%) விலை சரிவால் கடந்த 17ம் தேதி வாரத்தில் பணவீக்கம் 1.39 சதவீதம் குறைந்து 0.42 சதவீதமானது. முந்தைய வாரத்தில் இது 1.81 சதவீதமாகவும், கடந்த ஆண்டில் 15.48 சதவீதமாகவும் இருந்தது.

இதன் மூலம் 2 ஆண்டுக்கு மேல் விலை உயர்வை கட்டுப்படுத்த போராடி வந்த மத்திய அரசு மற்றும் ரிசர்வ் வங்கிக்கு தற்போது சற்று சுமை குறைந்துள்ளது. மேலும், இதன் எதிரொலியாக ஜனவரியில் நடக்கும் காலாண்டு மறு ஆய்வு நிதி கூட்டத்தில் கடன் வட்டியை ரிசர்வ் வங்கி குறைக்க வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் தெரிவித்தனர். இருப்பினும், தானியங்கள், பால், முட்டை, கறி, மீன் போன்ற புரதச் சத்து பொருட்கள் விலை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது.